வெளிவாரி விளைவுகள்



e தக்சலாவ கல்விக்கூடம்™
The National e-learning Portal for The General Education
Start Your Learning Journey with e-thaksalawa

வெளிவாரி விளைவுகள்



ஒரு நபர்/நிறுவனம் மேற்கொள்ளும் நுகர்வு/உற்பத்தி நடவடிக்கையின்போது அதனுடன் நேரடியாக தொடர்புபடாத மூன்றாம் தரப்பினர் நன்மையடைதல்/ பாதிப்படைதல் வெளிவாரி விளைவுகள் எனப்படுகின்றது.

இவ் விளைவுகளுக்கு எதிராக பணப்பெறுவனவோ, பணக்கொடுப்பனவோ இருப்பது இல்லை.

தோன்றும் சந்தர்ப்பங்கள்

01 உற்பத்தி நடவடிக்கையின் போது.

02 நுகர்வு நடவடிக்கையின் போது.

இவற்றின் இயல்புகள்

01 சாதகமானது (நேர்க்கணிய வெளிவாரி விளைவுகள்).

02 பாதகமானது(எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகள்).

தொகுப்பு திரு ச.ஜெயகுமார், பொருளியல் ஆசிரியர் (யா/வயாவிளான் மத்திய கல்லூரி)

கணினி வடிவமைப்பு திரு கோ.கேதாரன் த.தொ.தொ. ஆசிரியர் (வ/தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

உதாரணங்கள் :



மேற்கூறிய வெளிவாரி விளைவுகள் காரணமாக பொருளாதாரத்தில் தனியார் செலவு, சமூகச் செலவுகளையும் தனியார் நன்மைகளையும், சமூக நன்மைகளையும் தோற்றுவிக்கின்றது. அவற்றைக் கொண்டு பின்வரும் தொடர்புகளை பெறமுடிகின்றது.

- சமூகச் செலவு = தனியார் செலவுகள் + வெளிவாரிச்செலவுகள்
- சமூக நன்மை = தனியார் நன்மைகள் + வெளிவாரி நன்மைகள்
- தேறிய சமூகச் செலவு = சமூகச்செலவுகள் - வெளிவாரிச்செலவுகள்
- தேறிய சமூக நன்மை = சமூக நன்மை - சமூகச்செலவுகள்

தொகுப்பு திரு ச.ஜெயகுமார், பொருளியல் ஆசிரியர் (யா/வயாவிளான் மத்திய கல்லூரி)
கணினி வடிவமைப்பு திரு கோ.கேதாரன் த.தொ.தொ. ஆசிரியர் (வ/தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

உதாரணம் : அரசு அபிவிருத்தித் திட்டம் ஒன்றிற்கு எதிர்பார்க்கும் செலவுகள் வருமாறு :

தனியார் செலவுகள்	500	தனியார் நன்மைகள்	400
வெளிவாரிச் செலவுகள்	1000	வெளிவாரி நன்மைகள்	800



எனவே இத்திட்டம் எதிர்பார்க்கும்

சமூகச் செலவு = தனியார் செலவுகள் + வெளிவாரிச்செலவுகள்
1500 = 500 + 1000

சமூக நன்மை = தனியார் நன்மைகள் + வெளிவாரி நன்மைகள்
1200 = 400 + 800

இங்கு சமூகச் செலவு > சமூக நன்மை
1500 > 1200

எனவே இத்திட்டம் கைவிடப்படும் / மாற்றியமைக்கப்படும்.

தொகுப்பு திரு ச.ஜெயகுமார், பொருளியல் ஆசிரியர் (யா/வயாவிளான் மத்திய கல்லூரி)
கணினி வடிவமைப்பு திரு கோ.கேதாரன் த.தொ.தொ. ஆசிரியர் (வ/தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

வெளிவாரி விளைவுகளும் சந்தை தோல்வியும்

1. உற்பத்தியில் நேர்க்கணிய வெளிவாரிவிளைவுகள் தொடர்பாக சந்தை தோல்வியடைதல்.



வரைபடத்தின் அடிப்படையில்

1. சந்தை முறைமை தனியார் செலவுகளையும் தனியார் நன்மைகளையும் மட்டும் கருத்திற் கொண்டு வெளியீட்டை மேற்கொள்வதனால் **Q** வெளியீட்டு மட்டத்தில் உற்பத்தி செய்வார்.

2. சந்தை முறை உற்பத்தியில் வெளிவாரி நன்மைகளைக் கருத்தில் கொள்வதில்லை.

3. **Q1** வெளியீட்டு மட்டம் எல்லை சமூக நன்மை, எல்லை சமூக செலவு சமனடையும் உத்தம வெளியீட்டு மட்டமாகும்.

4. சந்தை முறைமை வெளிவாரி நன்மைகளைக் கவனத்திற் கொள்ளாமையினால் சமூக ரீதியான உத்தம வெளியீட்டு மட்டத்திற்குக் குறைவான வெளியீட்டை மேற்கொள்ளும்.

5. இதனால் சந்தை வெளியீடு குறையுற்பத்தி மற்றும் குறை வளப்பயன்பாடு காரணமாகச் சந்தை தோல்வியடைகின்றது.

தொகுப்பு திரு ச.ஜெயகுமார், பொருளியல் ஆசிரியர் (யா/வயாவிளான் மத்திய கல்லூரி)
கணினி வடிவமைப்பு திரு கோ.கேதாரன் த.தொ.தொ. ஆசிரியர் (வ/தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

2. உற்பத்தியில் எதிர்க்கணிய வெளிவாரிவிளைவுகள் தொடர்பாக சந்தை தோல்வியடைதல்.



வரைபடத்தின் அடிப்படையில்

1. சந்தை முறைமை தனியார் செலவுகளையும் தனியார் நன்மைகளையும் மட்டும் கருத்திற் கொண்டு வெளியீட்டை மேற்கொள்வதனால் **Q** வெளியீட்டு மட்டத்தில் உற்பத்தி செய்வார்.

2. சந்தை முறை உற்பத்தியில் வெளிவாரி செலவுகளைக் கருத்தில் கொள்வதில்லை.

3. **Q1** வெளியீட்டு மட்டம் எல்லை சமூக நன்மை, எல்லை சமூக செலவு சமனடையும் உத்தம வெளியீட்டு மட்டமாகும்.

4. சந்தை முறைமை வெளிவாரி செலவுகளைக் கவனத்திற் கொள்ளாமையினால் சமூக ரீதியான உத்தம வெளியீட்டு மட்டத்திற்குக் அதிகமான வெளியீட்டை மேற்கொள்ளும்.

5. இதனால் சந்தை வெளியீடு மிகையுற்பத்தி மற்றும் மிகை வளப்பயன்பாடு காரணமாகச் சந்தை தோல்வியடைகின்றது.

தொகுப்பு திரு ச.ஜெயகுமார், பொருளியல் ஆசிரியர் (யா/வயாவிளான் மத்திய கல்லூரி)
கணினி வடிவமைப்பு திரு கோ.கேதாரன் த.தொ.தொ. ஆசிரியர் (வ/தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

3. நுகர்வில் நேர்க்கணிய வெளிவாரிவிளைவுகள் தொடர்பாக சந்தை தோல்வியடைதல்.



வரைபடத்தின் அடிப்படையில்

1. சந்தை முறைமை தனியார் செலவுகளையும் தனியார் நன்மைகளையும் மட்டும் கருத்திற் கொண்டு வெளியீட்டை மேற்கொள்வதனால் **Q** வெளியீட்டு மட்டத்தில் உற்பத்தி செய்வார்.

2. சந்தை முறை நுகர்வில் வெளிவாரி நன்மைகளைக் கருத்தில் கொள்வதில்லை.

3. **Q1** வெளியீட்டு மட்டம் எல்லை சமூக நன்மை, எல்லை சமூக செலவு சமனடையும் உத்தம வெளியீட்டு மட்டமாகும்.

4. சந்தை முறைமை வெளிவாரி நன்மைகளைக் கவனத்திற் கொள்ளாமையினால் சமூக ரீதியான உத்தம வெளியீட்டு மட்டத்திற்குக் குறைவான வெளியீட்டை மேற்கொள்ளும்.

5. இதனால் சந்தை வெளியீடு குறையுற்பத்தி மற்றும் குறை வளப்பயன்பாடு காரணமாகச் சந்தை தோல்வியடைகின்றது.

தொகுப்பு திரு ச.ஜெயகுமார், பொருளியல் ஆசிரியர் (யா/வயாவிளான் மத்திய கல்லூரி)
கணினி வடிவமைப்பு திரு கோ.கேதாரன் த.தொ.தொ. ஆசிரியர் (வ/தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

4. நுகர்வில் எதிர்க்கணிய வெளிவாரிவிளைவுகள் தொடர்பாக சந்தை தோல்வியடைதல்.



வரைபடத்தின் அடிப்படையில்

1. சந்தை முறைமை தனியார் செலவுகளையும் தனியார் நன்மைகளையும் மட்டும் கருத்திற் கொண்டு வெளியீட்டை மேற்கொள்வதனால் **Q** வெளியீட்டு மட்டத்தில் உற்பத்தி செய்வார்.

2. சந்தை முறை நுகர்வில் எதிர்கணிய வெளிவாரி விளைவுகளைக் கருத்தில் கொள்வதில்லை.

3. **Q1** வெளியீட்டு மட்டம் எல்லை சமூக நன்மை, எல்லை சமூக செலவு சமனடையும் உத்தம வெளியீட்டு மட்டமாகும்.

4. சந்தை முறைமை நுகர்வில் எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகளைக் கவனத்திற் கொள்ளாமையினால் சமூக ரீதியான உத்தம வெளியீட்டு மட்டத்திற்குக் அதிகமானன வெளியீட்டை மேற்கொள்ளும்.

5. இதனால் சந்தை வெளியீடு மிகையுற்பத்தி மற்றும் மிகை வளப்பயன்பாடு காரணமாகச் சந்தை தோல்வியடைகின்றது.

தொகுப்பு திரு ச.ஜெயகுமார், பொருளியல் ஆசிரியர் (யா/வயாவிளான் மத்திய கல்லூரி)
கணினி வடிவமைப்பு திரு கோ.கேதாரன் த.தொ.தொ. ஆசிரியர் (வ/தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

வெளிவாரி விளைவுகளினால் ஏற்படும் சந்தைத்தோல்வியினைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள்.



நேர்க்கணிய வெளிவாரி விளைவுகளை ஊக்குவிப்பதற்கு அரசின் நடவடிக்கைகள்.

- நேர் வெளிவாரி விளைவுடைய பொருட்கள் சேவைகளுக்கான கேள்வியை அதிகரித்தல்.
- நேர் வெளிவாரி விளைவுடைய பொருட்கள் சேவைகளுக்கான நிரம்பலை அதிகரித்தல்.
- நேர் வெளிவாரி விளைவுடைய பொருட்கள் சேவைகளை அரசு உற்பத்தி செய்தல்.

எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகளைக் கட்டுப்படுத்துவதற்குரிய அரசின் நடவடிக்கைகள்.



- உரிமைப்பத்திரக் கட்டணங்களை அறவிடல்.
- பாதிக்கப்பட்டோருக்கான நட்டஈடு வழங்கக் கோருதல்.
- உற்பத்திகளுக்கு வரிகளை விதித்தல்.
- மீள் சுழற்சிக்கு உட்படுத்தல்.
- உற்பத்திகளைத் தடைசெய்தல்.

தொகுப்பு திரு ச.ஜெயகுமார், பொருளியல் ஆசிரியர் (யா/வயாவிளான் மத்திய கல்லூரி)
கணினி வடிவமைப்பு திரு கோ.கேதாரன் த.தொ.தொ. ஆசிரியர் (வ/தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk